4. விதி 110–ன்கீழ் அறிக்கை

நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தமிழக மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் உள் ஒதுக்கீடு வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு உட்பட, நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர நீட் தேர்வு முறை 2016–2017 ஆம் கல்வியாண்டிலிருந்து மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீவிர முயற்சியினால், தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து அந்த ஆண்டு விதிவிலக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலுள்ள நாங்களும், தமிழ்நாட்டிலுள்ள பொது மக்களும், நீட் தேர்வை கடுமையாக எதிர்த்து வருகின்றோம். 31–1–2017 அன்று நீட் தேர்வினை எதிர்த்து இதே சட்டமன்றத்தில் ஒருமனதாக ஒரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதேவேளையில், நீட் தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களை, குறிப்பாக, கிராமப்புற ஏழையெளிய மாணவர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை விளக்கி, உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு, மூத்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களைக் கொண்டு வாதாடப்பட்டும் வருகிறது.

நீட் தேர்வை அறிமுகப்படுத்திய பிறகு, அத்தேர்வில் தேர்ச்சி பெற்று தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இந்த நிலை வரும் ஆண்டுகளில் தொடரக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி வருகின்றது. இதுமட்டுமல்லாமல், அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஆதி

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 21

திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் ஆகிய பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பிரத்யேகமாக ஓர் உள் ஒதுக்கீடு கொடுக்க வகை செய்யும் சிறப்புச் சட்டம் ஒன்றை இயற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து வருகிறது.

இச்சட்டத்தை இயற்றுவதற்கு வகை செய்ய ஏதுவாக, தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களையும் தொகுத்து, உரிய பரிந்துரையையும் தமிழ்நாடு அரசுக்கு வழங்க, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்படும். அந்த ஆணையத்தில் பள்ளிக் கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சட்டம் ஆகிய துறைகளின் அரசுச் செயலாளர்களும், பள்ளிக் கல்வித் துறையினால் நியமிக்கப்படும் 2 கல்வியாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். மருத்துவக் கல்வி இயக்குநர் இவ்வாணையத்தின் உறுப்பினர்–செயலராகச் செயல்படுவார்.

மேற்கூறிய பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் குறைந்த அளவிலேயே சேர்வதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மதிப்பீடு செய்து, இந்நிலையை சரி செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த ஆணையம் அரசுக்குப் பரிந்துரை செய்யும். தனது பரிந்துரையை ஒரு மாத காலத்திற்குள் இவ்வாணையம் அரசுக்கு சமர்ப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கவன ஈர்ப்பு

(அ) துறைமுகம் தொகுதி, பி.ஆர்.என். கார்டன், கிளைவ் பேட்டரி மற்றும் எல்லீஸ்புரம் குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளை பழுதுபார்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.